மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

11.10.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# தேர்தல் வரைபடத்தை மாற்ற ரணில் முயற்சி

## டலஸ் குற்றச்சாட்டு

உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள கருத்து தேர்தல் வரைபடத்தை சுருங்கச் செய்யும் முயற்சியின் வெளிப்பாடே என மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள கருத்து அச்சமூட்டும் வகையில் உள்ளதாகவும், உள்ளூராட்சி தேர்தல் முறை தொடர்பில் திடீரென இவ்வாறு அறிக்கை வெளியிடப்பட்டமை தேர்தலை ஒத்திவைக்கும் தந்திரமாக இருக்கலாம் எனவும் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அரசாங்கம் தன்னுடன் எந்த கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை எனவும் ஜனாதிபதியின் அறிக்கை மிகவும் பாரதூரமானது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தன்னிடம் தெரிவித்ததாக அவர் குறிப்பிடுகின்றார். தேர்தலுக்கான அடிப்படை ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில், இவ்வாறான கருத்துக்கள் உண்மையான நோக்கத்தினால் வெளியிடப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள டலஸ் அழகப்பெரும, அரசாங்கத்தின் தீய நோக்கத்தை தோற்கடிக்க கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார். கம்புறுபிட்டிய பிரதேச சபையின் இலவச ஆயுர்வேத நிலையம் மற்றும் பகல்நேர பராமரிப்பு நிலைய திறப்பு விழா நிகழ்விலேயே .அழஹப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# அவசரமாக கடன் நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கம்

**(சில்மியாஜினி)**

அவசரமாக கடன் நிவாரணம் தேவைப்படும் 54 நாடுகளில் இலங்கையும் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் **(UNDP)** தெரிவித்துள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

விரைவாக ஆழமடைந்துவரும் கடன் நெருக்கடியை எதிர்கொள்ளும் மிக உடனடி ஆபத்தில் உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

02

# ஜனாதிபதியின் கருத்து மக்களின் இறைமைக்கு விடுக்கப்பட்ட பாரிய சவால்

**ரஞ்சித் மத்தும பண்டார**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து மக்களின் இறைமைக்கு விடுக்கப்பட்ட பாரிய சவாலாகவே நாம் கருதுகின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ்வறிக்கையில் கூறுகையில், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதை ஒத்திவைப்பதே இதன் அடிப்படை

02

# வரப்பிரசாதங்களுக்காக மக்களை காட்டிக் கொடுக்கமாட்டோம்



**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ**

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளுக்காக, சலுகைகளுக்காக எந்தக் கொள்கைகளையும் காட்டிக் கொடுக்கமாட்டேன் எனவும்,முடியாட்சி தருவதாகச் சொன்னாலும் ராஜபக்சர்களுடன் சேர்ந்து நாட்டையோ,220 இலட்சம் மக்களையோ,கட்சியையோ காட்டிக்கொடுக்க மாட்டேன் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம்

02

# தேர்தல் ஒன்றின் மூலமாகவே இந்த நாட்டிலே ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்ப முடியும்

**பாராளுமன்ற உறுப்பினர் - த.கலையரசன்**

**(சுமன்)**

இந்த நாட்டிலே யுத்தம் முடிந்த கையோடு தமிழ் மக்களை வாழவைக்கக் கூடிய எந்தச் செயற்பாட்டையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. அரசாங்கம் தமது பணிகளைச் செய்ய முடியாது தள்ளாடுகின்றது. தேர்தல் ஒன்றின் மூலமாகவே இந்த நாட்டிலே ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என தமிழ்த் தேசியக்

02



# அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்த ஒற்றுமையோ பலமோ இன்று இல்லை

**பாராளுமன்ற உறுப்பினர் - கோ.கருணாகரம் ஜனா**

**(சுமன்)**

அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்த ஒற்றுமையோ பலமோ இன்று இல்லை. தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கும் அனைத்து சக்திகளும் இன்று ஒற்றுமையாக நிற்க வேண்டும். அதனைத தான் மேற்குலகமும் விரும்புகின்றது. அதற்குத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மிக உறுதியாக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார். திருக்கோவில் பிரதேசத்தில் வளைகுடா வானம்பாடிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு

02






# 13ஐத் தாண்டி தமிழ் மக்களின் அபிலாசைக்கான அரசியற்தீர்வு குறித்து வலியுறுத்திய ஜனநாயக போராளிகள் கட்சி



**(சுமன்)**

பூரண அதிகாரங்களுடன் கூடிய மாகாணசபை, 13வது திருத்தச்சட்டத்தைத் தாண்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலான அரசியற் தீர்விற்கு இந்தியா பக்க பலமாக இருக்க வேண்டும் என இந்தியப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியுள்ளதாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார். இது தொடர்பில்

04

# இலங்கையில் முதலாவது சூரிய மின்னுற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் திறந்து வைப்பு

02

## அவசரமாக கடன் நாடுகளில்

வளரும் நாடுகள் விரைவாக ஆழமடைந்து வரும் கடன் நெருக்கடியை எதிர்கொள்வதாகவும், செயலற்ற தன்மையின் அபாயங்கள் பயங்கரமானவை என்றும் ருனே்ீ எச்சரித்ததுள்ளது. இலங்கை, பாகிஸ்தான், துனிசியா, சாட் மற்றும் சாம்பியா ஆகியவை உடனடி ஆபத்தில் உள்ள நாடுகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் கருத்து மக்களின்

நோக்கம் என்பது தெளிவாகிறது.உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்ததும் விக்கிரமசிங்கவின் சொந்த முன்மொழிவாகும்.தற்போது அந்த எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என அவர் கூறுவதும்,உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது தாம் தற்போது பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவின் வெளிப்படையான தோல்வியை மூடிமறைக்கும் தந்திரமே அன்றி வேறில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கம், இத்தருணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரத்தை மிகக் கீழ்த்தரமான முறையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மூலம் அபகரிக்க தற்போது முயற்சிக்கப்பட்டு வருகிறது.இது ஜனநாயக ஆட்சியில் நடக்கக் கூடாதவொன்றாகும். மக்களின் அபிலாஷைகளுக்கோ அல்லது நாடு தற்போது எதிர்நோக்கி வரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கோ உரிய தீர்வுகளை வழங்கத் தவறிய ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன பெரமுன,இழுத்தடிப்பின் மூலம் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தனது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

இத்தருணத்தில் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையைப் பாதுகாக்க எதிர்க்கட்சிகளின் அனைத்து சக்திகளுடனும் இணைந்து பணியாற்ற ஐக்கிய மக்கள் சக்தி உறுதிபூண்டுள்ளது என்பதை வலியுறுத்துகிறோம். தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சட்டத்திற்கு ஏற்ப அமைந்துள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். குறுகிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலையோ அல்லது எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க ஜனாதிபதி செயற்பட்டால்,பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயக ரீதியில் அதற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுக்க தயங்க மாட்டோம் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

## வரப்பிரசாதங்களுக்காக மக்களை

(09)தெஹியத்தகண்டியில்தெரிவித்தார்.பலஆண்டுகளுக்குமுன்பு,ஆபிரிக்காவின் ருவாண்டாவில் நடந்த பாரியதொரு பழங்குடிப் போர் காரணமாக கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உயிர்கள் பலியாகினாலும்,இன்று ருவாண்டா ஆபிரிக்காவின் புதிய சிங்கப்பூர் என்று அழைக்கப்படுகிறது எனவும்,அது இந்நாட்டில் போரில் இழந்த உயிர்களை விட பெரிய தொகை எனவும்,அவர்கள் அபிவிருத்தியில் நாளுக்கு நாள் முன்னேறி வந்தாலும்,எமது நாட்டில் யுத்தம் நிறைவடைந்து ஏறக்குறைய 12 வருடங்கள் கடந்துள்ள போதிலும்,இன்னமும் இனவாதம் மற்றும் மதவாதத்தின் அடிப்படையில் நாட்டை அழிக்கும் திட்டத்திற்கு ராஜபக்ச குடும்பம் நாட்டை இட்டுச் சென்றது எனவும்,அவ்வாறு வக்குரோத்தடையச் செய்த ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நாமல் குமரருக்கு நாட்டைக் கட்டியெழுப்பும் குழுவொன்றிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். வரலாறு நெடுக தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்ந்த நம் நாட்டு மக்களும் முன்னின்ற நாடும்,மொட்டு அரசாங்கத்தாலும் ராஜபக்ச குடும்பத்தாலும் வங்குரோத்தடையச் செய்யப்பட்டதாக அரசியல் வரலாற்றில் எழுதப்படும் எனவும்,தற்போது,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்சர்கள் கைப்பாவையாக பாவித்து தமக்கு நெருக்கமாகவிருக்கும் நபர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள்,மீனவர்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என சகலரையும் அவர்கள் சிரமத்திற்குள்ளாக்கினர் எனவும்,அடுத்த போகத்திற்குத் தேவையான உரங்களைக் வழங்குவதற்குக் கூட முடியாத நிலை உள்ளதாகவும்,இதுவரை 3 போகங்கள் தொடர்ச்சியாக நஷ்டத்தை சந்தித்து வருவதாகவும்,69 இலட்சம் பேர் நியமித்த மொட்டு அரசாங்கம் வேண்டுமென்றே விவசாயிகளை அழித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். அமெரிக்கவின் செனட் சபையில் இது குறித்து அறிக்கையொன்று கூட தயாரிக்கப்பட்டுள்ளதாகவும்,

முதன் முறையாக மனித உரிமைகள் பேரவை கூட நமது நாட்டில் பொருளாதார உரிமைகள் அழிக்கப்படுவது குறித்து விவாதிக்கிறது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,சமூகத்தின் மிகச்சிறிய அலகிலுள்ள தனிமனிதன் முதல் தொழில் வல்லுநர்கள்,அரச ஊழியர்கள் உட்பட அனைவரினதும் பொருளாதாரத்தையும் ராஜபக்சர்கள் அழித்தனர் எனவும்,இதன் காரணமாக, மக்களின் போதிய உணவு மற்றும் கல்விக்கான உரிமைகள் கூட மீறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்தவாறு உரப் பிரச்சனையைத் தீர்க்க முயல்கின்றனர் எனவும்,ஒரு நிமிடமேனும் கூட விவசாயிகள் மீனவர்கள் அருகில் செல்லாது,தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர்கள் தமது சிறப்புரிமைகளை அதிகரித்து, மொட்டுக்கு அதிக அமைச்சுகளை வழங்கி தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கே முயற்சிக்கின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதுவரை எழு மூளைக் காகம் 38 இராஜாங்க அமைச்சர்களின் பெயர்களை வழங்கிய நிலையில்,ராஜபக்ச குடும்பத்திற்கு விசுவாசமான மேலும் 12 அடிமைகளின் பெயர்களை அமைச்சுப் பதவிகளுக்காக முன்மொழியப்பட்டுள்ளன எனவும்,இதனூடாக மீண்டும் ஆட்சியைப் பெற முயற்சித்தாலும் மக்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அமைச்சர்களின் பிள்ளைகள் கற்கும் அனைத்துப் பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைத் திரைகள்,ஆங்கிலக் கல்வி என்பன அடிப்படையாக இருந்தாலும், நாட்டின் பிற மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் இதுபோன்ற வசதிகள் குறைந்தபட்சமே உள்ளன எனவும்,இது எதிர்காலத்தில் தொழிற் சந்தையை கூட பெரிதும் பாதித்துள்ளதாகவும்,நாட்டில் இவ்வாறான இடைவெளியை ஏற்படுத்தியிருந்தும் தேர்தலின் போது சிங்களவாதம், பௌத்தவாதம் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றிவருகின்றனர் எனவும்,நமது கல்வி முறையின் மூலம் உலகையே வெல்லக்கூடிய மாணவ தலைமுறையை உருவாக்க முடியும் எனவும்,அவர்களுக்கு சமமான கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டால்,தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து உலகையே வெற்றி கொள்ள முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் உலக மனநல தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் (10.10.2022) திங்கட்கிழமை PAC குழுமத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பேருந்து, முச்சக்கரவண்டிகளில் Stickers களும் வழங்கி ஒட்டப்பட்டன. (எஸ்.எஸ்.

## அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்

தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், இழந்த உயிர்களைத் தவிர மற்றையவைகளையெல்லாம் கல்வியின் மூலமாக மீளப் பெற்றிட முடியும் என்ற நம்பிக்கை எமது இனத்திற்கு இருக்கின்றது. ஏனெனில் ஒரு காலத்திலே இலங்கையிலே எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழர்கள் கோலோற்றிய நிலை இருந்தது. அந்த நிலை மீண்டும் வரவேண்டும்.

நாங்கள் இந்த நாட்டில் பேரினவாத சக்திகளுடன் இணைந்து வாழ முடியாது என்ற காரணத்திற்காக தமிழீழம் என்ற குறிக்கோளுடன் ஆயுதமேந்திப் போராடி இணைந்த வடகிழக்கில் ஒரு குறிப்பிட்ட காலம் வாழ்ந்தாலும் இன்று அந்த மாகாணங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு மாகாணத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கிழக்கு மகாணத்தை பேரினவாத சக்திகள் தங்களது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மிகவும் உறுதியாக இரகசிய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 1921ம் அண்டு கணக்கெடுப்பின் பிரகாரம் கிழக்கு மாகாணத்திலே ஒருசில நூறு சிங்களவர்களே வாழ்ந்ததாக வரலாறு உண்டு. ஆனால் இன்று 24 வீதமாக அவர்கள் வாழுகின்றார்கள். கல்லோயாக் குடியேற்றம், கந்தளாய் குடியேற்றத்துடன உருவான சேருவில தொகுதி இந்த மாகாணத்தில் சிங்களவர்களின் அதிகரிப்பை உருவாக்கியிருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் சேனைப்பயிர்ச் செய்கை, மரமுந்திரிகைச் செய்கை என்ற போர்வையில் எல்லைப் புறங்களில் குடியேற்றங்களைச் செய்து மட்டக்களப்பிலும் சிங்களப் பிரதிநிதித்துவம் ஒன்றைப் பெறுவதற்காகத் துடியாய்த் துடிக்கின்றார்கள்.

அதுமாத்திரமல்லாமல் கனிய வளம் என்ற பெயரில் எமது மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் பாரிய திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அம்பாறையிலே திருக்கோவில், திருகோணமலையிலே புல்மோட்டை, மட்டக்களப்பில் வாகரை போன்ற பிரதேசங்களில் எமது வளங்களைச் சுரண்டுவது மாத்திரமல்லாமல் இங்கு கடலரிப்பினால் இந்தப் பிரதேசங்கள் காணாமல் போனாலும் அக்கறையில்லை என்ற ரீதியில் செயற்படுகின்றார்கள். அம்பாறை மாவட்டம் பல வழிகளிலே பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம் போராட்டத்திற்கு அப்பால் சகோதர இனங்களினால் கூட அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம். 1989ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறைமையினால் ஒரே ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறுமளவிற்கே நாங்கள் இங்கு வாழுகின்றோம். இருந்தாலும் இரண்டு தடவைகளில் அம்பாறை மாவட்டம் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கின்றது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயத்தை மையமாக வைத்து 2020ம் ஆண்டு இந்த மாவட்டம் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் உறுப்பினரை பிரதிநிதித்துவம் இல்லாத அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கியிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவம் எக்காரணம் கொண்டும் மீண்டும் பிடுங்கப்பட அனுமதிக்க மாட்டோம். ஏனெனில் அம்பாறை மாவட்டம் பேரினவாத சக்தினர் மாத்திரமல்ல சகோதர இனங்களினால் தற்போதும் துன்புறுத்தலுக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது. இன்றுவரைக்கும் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்குத் தடையாக இருப்பவர்கள் சகோதர இனத்தினரே. நாங்கள் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டவர்களுடன் வாதிட்டும் இருக்கின்றோம். ஆனால் சகோதர பாராளுமன்ற உறுப்பினர் இதற்குத் தடையாக இருக்கின்றார்.

இப்படிஇருக்கும்போதுஇவர்களுடன் எதிர்காலத்தில் நாங்கள் எவ்வாறு சேர்ந்து செயற்பட முடியும். எங்களுடைய தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைச் சிந்திக்க வேண்டும். நாங்கள் அவர்களுடன் இணைந்து பயணிக்க முயற்சிக்கின்றோம். அது தவறான விடயம் என்பதை அவர்களின் செயற்பாடுகள் மூலமே அவர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இவற்றை நாங்கள் புரிந்து செயற்பட வேண்டும். தற்போது தமிழர்கள் அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலே ஒற்றுமையாக இருக்க வேண்டிய காலகட்டத்திலே இருக்கின்றோம். ஏனெனில் நாங்கள் பல இழப்புகளைச் சந்தித்து அரசியல் ரீதியில் நடுச் சந்தியில் நிற்கின்றோம். ஆயுத ரீதியில் பல முரண்பாடுகள் எங்களுக்குள் இருந்தும் 2001லே அரசியல் ரீதியாகக் குரல் கொடுப்பதற்கு ஒரு சக்தி வேண்டும் என்பதற்கான ஒரு சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்த ஒற்றுமையோ பலமோ இன்று இல்லை. தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கும் அனைத்து சக்திகளும் இன்று ஒற்றுமையாக நிற்க வேண்டும். அதனை தான் மேற்குலகும் விரும்புகின்றது.

மேற்குலகும் இலங்கைக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்கின்றது. தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான அரசியற் தீர்வைக் கொடுக்கக் கோருகின்றது. கடந்த ஐநா பேரவையிலே பிரித்தானியாவால் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஐநா சபையிலே வாக்களிக்கக் கூடிய 47 நாடுகளில் 20 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. இலங்கைக்கு ஆதரவாக 07 நாடுகளே வாக்களித்துள்ளன. இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகள் கொமினிசம் என்ற போர்வையிலே சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாடுகளே. ஆனால் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளிலே ஜனநாயகம் இருக்கின்றது. அங்கு மொழி, இன ரீதியில் மாகாணங்கள் பிரிக்கப்பட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா நடுநிலை வகித்துள்ளது. அதற்கு பல விமர்சனங்கள் இருந்தாலும், இந்தமுறை வளைகுடா நாடுகள் கூட நடுநிலை வகித்துள்ளன. இந்தியா நடுநிலை வகித்தமைக்கு அரசியற் காரணங்கள் பல இருந்தாலும் இந்தியா உறுதிபட ஒரு விடயத்தைக் கூறியிருக்கின்றது. 13வது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றது. அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாகாண ஆட்சி எங்களது கையில் இருக்குமானால் இந்த மாதிரியான நில அபகரிப்புகள், எல்லைப்புற குடியேற்றங்கள், இல்மனைட் போன்ற எமது வளங்கள் சுரண்டப்படுகின்ற விடயங்களுக்கு நாங்களே முடிவு கட்ட முடியும். எங்களை நாங்களே ஆளுகின்ற ஒரு உள்ளகச் சுயநிர்ணய முறைமை உருவாகுமாக இருந்தால் இத்தகு பிரச்சனைகள் இடம்பெறாது. தற்போது 24 வீதமாக இருக்கும் சிங்கள மக்களது சனத்தொகை மதிப்பீடு எதிர்காலத்தில் அதனைத் தாண்டிச் செல்லாமல் இருப்பதற்கு நாங்கள் வழிமுறைகளைக் கையாள முடியும்.

## தேர்தல் ஒன்றின் மூலமாகவே இந்த நாட்டிலே

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார். திருக்கோவில் பிரதேசத்தில் வளைகுடா வானம்பாடிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், போராட்ட காலத்திலே எமது கல்வி வளம் திட்டமிட்டு சூரையாடப்பட்டது. கல்வியினை மேம்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் எமது சமூகத்தை வளமுள்ள சமூகமாக உருவாக்க முடியும். கல்வி, விளையாட்டு, ஒழுக்க விழுமியங்களோடு சேர்ந்ததாக எமது சமூகம் வளர்க்கப்பட வேண்டும்.

இந்தப் பிரதேசத்திலே இல்மனைட் அகழ்வு விடயம் தொடர்பில் சுமார் ஏழு வருடங்களுக்கு மேலாக இதற்குஎதிரானநடவடிக்கைளைநாங்கள்மேற்கொண்டு வருகின்றோம். இது தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சருடனும் கலந்துரையாடியதன் பேரில் இவ்விடயம் இடம்பெறமாட்டாது என்ற கருத்தினையும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதேபோன்று எமது மக்களுக்குப் பாதகம் விளைவிக்கும் செயற்பாடுகள் எவை முன்னெடுக்கப்பட்டாலும் அதனைத் தடுப்பதற்கு நாங்கள் முழுமூச்சாகச் செயற்படுவோம்.

யுத்தம் முடிவுற்றிருக்கின்ற நிலையில் தமிழர்களின் நில அபகரிப்பு விடயம் மிக மோசமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கம் தங்களின் நிருவாக ரீதியான செயற்பாடுகளை முன்வைத்து அரச படைகளோடு குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே எங்களது தொன்மையான பூர்வீகமான இடங்களைக் குறிவைத்து அந்த இடங்களையெல்லாம் சுபளீகரம் செய்கின்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசுடன் இணைந்து ஆட்சி செய்யலாம் என்று சொல்லுகின்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் இந்த விடயங்களிலே எந்தளவிற்குக் கவனம் செலுத்திகின்றார்களோ தெரியவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் தெளிவாக இந்த விடயங்களிலே அரசுக்கு எதிர்ப்பினை வெளியிட்டு எமது பிரதேசங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் எமது மக்கள் திசைமாறிச் சென்றிருந்தாலும் எதிர்காலத்தில் அவ்வாறான விதத்தில் நடந்து கொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினைப் பலப்படுத்தவதன் ஊடாகவே தமிழ் மக்களின் இருப்பினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இந்த நாட்டிலே யுத்தம் முடிந்த கையோடு தமிழ் மக்களை வாழவைக்கக் கூடிய எந்தச் செயற்பாட்டையும் இந்த அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் உள்ளூராட்சி மன்றங்களின் காலமும் முடிவுற்றிருக்கின்றது. இந்த நாட்டிலே அரசாங்கம் தமது பணிகளைச் செய்ய முடியாது தள்ளாடுகின்றது. பாராளுமன்றத்திலும் பல குழறுபடிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டு மக்கள் பொதுவான ஒரு தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்த்திருக்கின்றார்கள். நிச்சயமாக அந்தத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அவ்வாறான நிலையில் தான் இந்த நாட்டிலே ஜனநாயகத்தை மீளவும் கட்டியெழுப்ப முடியும். தற்போதும் ராஜபக்ச ஆதரவு அணியின் அரசாங்கமே பாராளுமன்றத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் ஜனாதிபதியின் சீரான இயக்கத்திற்குத் தடையாக இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. இவ்வாறான விடயங்களைக் கருத்திற் கொண்டு இந்த நாட்டிலே நீண்டகாலமாக நடைபெறாமல் இருக்கின்ற மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அத்துடன் பாராளுமன்றமும் பலமில்லாத நிலையில் இருப்பதன் காரணமாக அதனையும் கலைத்து பாராளுமன்றத் தேர்தலையும் நடாத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாக இருக்கின்றது என்று தெரிவித்தார்.

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சு.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சு.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சு.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# இலங்கையில் முதலாவது சூரிய மின்னுற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் திறந்து வைப்பு



**(கல்லடி நிருபர்)**

மட்டக்களப்பு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட நாவற்காடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் இன்று (11) திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிராமிய வீதி மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர பிரதம அதிதியாக கலந்துகொண்டு, சூரிய சக்தி மின்நிலையத்தினை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்துள்ளார். சுமார் 2.5 பில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்டுள்ள குறித்த சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக பிறப்பிக்கப்படும் மின்சாரமானது நேரடியாக மின்சார சபைக்கு வழங்கப்பட்டு மக்கள் பாவனைக்கான பொது மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்த சூரிய சக்தி மின்நிலையத்தின் ஊடாக சுமார் 200 பேர் வரை நேரடியாக தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதுடன், 10 மெகாவாட் மின்சாரம் பிறப்பிக்கப்படுவதுடன் இதனை பிறப்பிப்பதற்காக 18676 சூரிய மின் கலங்கள், 47 மாற்றிகள், மற்றும் 04 ரான்ஸ்போமர்ஸ் என்பன இயங்கிவருகின்றது. அத்தோடு 40 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த சூரிய சக்தி மின்நிலையத்தில், மேலதிகமாக உள்ள நிலப்பரப்பில் நாட்டின் உணவுப் பாதுகாப்பு நிலையை கருத்திற்கொண்டும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தினையும் உயர்த்தும் நோக்கில் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அமைச்சரின் செயலாளர்கள், மின்சார சபை உயரதிகாரிகள், இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட மேலும் பல துறைசார் அதிகாரிகள் அதிதிகளாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். மேலும் இந் நிகழ்வின்போது பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் பயன்தரும் மாமரக் கன்றுகள் நடப்பட்டதுடன், அருகிலுள்ள பாடசாலைக்கு பெறுமதிவாய்ந்த **Smart Board** ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

**WindForce PLC, Vidullanka PLC** மற்றும் **HiEnergy Services (Pvt) Limited** ஆகிய நிறுவனங்களால் முதலீடு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இந்த **solar Universe** இலங்கையின் முதலாவது விவசாய மின் உற்பத்தி நிலையமாகும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## 13ஐத் தாண்டி தமிழ் மக்களின் அபிலாசைக்கான

மேலும் தெரிவிக்கையில், ஜனநாயகப் போராளிகள் கட்சியினராகிய நாங்கள் இந்தியாவில் பல முக்கிய சந்திப்புகளை மேற்கொண்டோம். இந்திய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள், ஆளுங்கட்சியின் பிரதிநிதி விவேக் ஜீ போன்றவர்களுடன் சந்திப்பினை மேற்கொண்டிருந்தோம். இதன் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், தற்போதைய இலங்கையின் நிலைமை, தமிழ் மக்களின் அரசியற் தீர்வு குறித்தான விடயங்கள், எமது மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினோம். விசேடமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டுவரப்பட்ட மாகாணசபைகள் முறைமை பூரண அதிகாரங்களுடன் கூடியதாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதாக அமைய வேண்டும். நடாத்தப்படாமல் இருக்கும் மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடாத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். 13வது திருத்தச்சட்டத்தைத் தாண்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலான அரசியற் தீர்விற்கு இந்தியா பக்க பலமாக இருக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு போராளிகளும், தமிழ் மக்களும் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய நிலைமை உருவாவதற்கு இந்தியா உதவ வேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏனைய வல்லரசுகளின் ஆதிக்கத்தினை போராளிகள் என்ற ரீதியில் நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அந்த வகையில் இந்தியா அதற்குரிய ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு போராட்ட ரீதியில் தமிழ் மக்களுக்குத் தலைமை வகித்த போராளிகள் ஜனநாய நீரோட்டதிலும் மக்களுக்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு இந்தியா பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்ற விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இச்சந்திப்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர், ஊடகப் பேச்சாளர் க.துளசி, உபதலைவர் என்.நகுலேஸ், மட்டு அம்பாறை இணைப்பாளர் தீபன், இளைஞர் அணி பொறுப்பாளர் நெல்சன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES




அருந்ததி
இணைய திருமண சேவை
+94777164524 | www.arunthathee.com
20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் | 18, ராமகிருஷ்ணா அவினியு, வெள்ளவத்தை

# இராஜாங்க அமைச்சர் வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு விஜயம்



**ந.குகதர்சன்**

வாழைச்சேனை கடதாசி ஆலையின் உற்பத்தியை அதிகரிக்க ஊழியர்களின் பங்களிப்பு முக்கியம் உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதுடன் இலாப கொடுப்பனவும் வழங்கப்படும் என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸாநாயக்க தெரிவித்தார். வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு திங்கட்கிழமை மாலை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸாநாயக்க விஜயம் ஒன்றினை மேற்கொண்டு ஆலையினை பார்வையிட்டதுடன் ஊழியர்களுடன் கலந்துரையாடும் போதே மேற் சொன்னவாறு தெரிவித்தார். ஆலையில் கடதாசி உற்பத்தி தொடர்பாகவும், ஆலையின் குறைபாடுகள் தொடர்பாகவும் நிருவாகிகளுடன் கலந்துரையாடப்பட்டதுடன், ஆலை உற்பத்தி நடவடிக்கை தொடர்பில் பார்வையிட்ட பின்னர் ஊழியர்களின் தேவைகளையும் கேட்டரிந்து கொண்டார்.

அதன் பின்னர் கருத்து தெரிவிக்கையில். கடதாசி ஆலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்ட நிலையில் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சம்பள பிரச்சனைகள், போக்குவரத்து பிரச்சனைகள் தொடர்பில் கூறப்பட்ட நிலையில் போக்குவரத்து பிரச்சனையை தீர்ப்பதற்கு ஆலையில் பழுதடைந்த நிலையில் உள்ள அம்புலன்ஸ் வண்டியை திருத்தி ஊழியர்களின் போக்குவரத்து பிரச்சனைக்கு பயன்படுத்த வழங்குவதாகவும் உறுதி வழங்கினார். அத்தோடு உற்பத்தியை அதிகரிக்கும் பட்சத்தில் இருபத்தைந்து நாட்களுக்கு மேல் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவும், நாளாந்தம் வழங்கி வரும் ஆயிரம் ரூபா சம்பளத்தில் இருந்து மேலதிமாக 350ஃஸ்ரீ சேர்த்து நாளாந்த சம்பளமாக 1350.00 ரூபா வழங்கவுள்ளதாகவும் வாக்குறுதி வழங்கினார். இதற்கு ஊழியர்கள் இராஜாங்க அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

ஆலையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கடதாசி ஆலையின் தவிசாளர் விமல் ரூபசிங்க, கடதாசி ஆலையின் சிரேஷ்ட இணைப்பதிகாரி ஓய்வுபெற்ற கேணல் எஸ்.பி.சுதர்மசிறி, உற்பத்தி முகாமையாளர் வி.சிவாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அவசர நெருக்கடிக்கான தீர்வு தொடர்பாக

# கல்முனை மாநகர சபையில் ஆலோசனைப் பட்டறை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

உள்ளூார் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் (எல்.டி.எஸ்.பி.– டுனுளுீ) கீழ், அவசர நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கான தேவைகளை அடையாளம் காண்பதற்கான ஆலோசனைப் பட்டறையொன்று கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை (10) கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் நடைபெற்றது. கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.ம்.றகீப் மற்றும் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற



இப்பட்டறையில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.பி.மௌலானா, என்.எம்.சாஹிர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இப்பட்டறையில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், ஏ.ஆர்.செலஸ்டினா, சட்டத்தரணி ஆரிகா காரியப்பர், சுபைல் அஸீஸ், ஏ.எம்.சித்தி நஸ்ரின் மற்றும் மாநகர சபையின் பிரிவுத் தலைவர்களுடன் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகங்கள், இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்தியக் காரியாலயம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி சில முக்கிய அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர். இதன்போது உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல், உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மேம்படுத்துதல் போன்ற தலைப்புகளில் பொதுவான விரிவுரைகள் மற்றும் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன் குழுக் கலந்துரையாடல்களும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

எதிர்வரும் காலங்களில் உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபைக்கு கிடைக்கப் பெறவுள்ள நிதியைக் கொண்டு, முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களை, பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளை மையப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, முழுநாள் செயலமர்வாக இப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆலோசனைப் பட்டறையின் ஒருங்கிணைப்பாளராக கல்முனை மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌஷாத் பணியாற்றியிருந்தார்.

# உள நல பிரிவில் கடமையாற்றும் பணியாளர்களர்கள் கௌரவிப்பு



**(வாஸ் கூஞ்ஞ)**

உலக உள நல தினமாகிய திங்கள் கிழமை (10.10.2022) அனைவரினதும் உளநல மற்றும் நல்வாழ்வை உலகளாவிய முன்னுரிமை யாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்ட உள நல பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரனையில் உலக உள நல தினம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட உள நல வைத்திய அதிகாரி வைத்தியர் பசில் ஜோகேஸ் லியோன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் வைத்தியர்கள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ உள நல பிரிவு பணியாளர்கள் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். இவ் நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் உள நல பிரிவில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு அவர்களின் சேவையை பாராட்டி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. கடந்த ஒரு வார காலமாக உள நல வாரம் கடைப்பிடிக்கப்பட்டதோடு பிரதேச ரீதியாக விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின்
விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி.
அகலம் 35
அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி .
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில்
அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# அம்பாறை, கல்முனை நெடுஞ்சாலை ஓரங்களில் தினசரி குவியும் குப்பைகள்



**அஸ்ஹர் இப்றாஹிம்**

அம்பாறை,கல்முனைபியரதானவீதியில் காரைதீவு சந்தியிலிருந்து மாவடிப்பள்ளிக்கு இடைப்பட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் பெரிய நீர்க் குழாய் செல்லும் பிரதேசங்களில் தினசரி குப்பைகள் சேரும் அளவு அதிகரித்து வருகிறது. இரவு வேளையில் வாகனங்களில் பயணிப்போர் வீதியின் இருமருங்கிலும் வீசிவிட்டு செல்வதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். காரைதீவு பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட இப்பிரதேசத்தில் கட்டிட இடிபாடுகள் , விலங்குகளின் கழிவுகள் , ஏனைய வீட்டுக்கழிவுகள் காணப்படுதாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206




Main Sponsor — MUBARAK TEXTILES

Co Sponsor — AZEEF FANCY

Official Sraee Blouse Partners — Mahalaxmi Boutique, RS Designer

Official Photography & Videography — INNOVO STUDIO

Official Sraee Florist Partner — Shan Party professionals

Media Partner — தினகரன், Daily News, SUNDAY OBSERVER, வசந்தம் TV, வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.

**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்




## கேக் வடிமைப்பாளர்கள்



## தங்கப்பதக்கம் வென்ற மாணவிக்கு கௌரவிப்பு



**வி.சுகிர்தகுமார்**

நடைபெற்று முடிவடைந்த கிழக்கு மாகாண மாகாண மட்ட விளையாட்டு விழாவில் 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்த அக்கரைப்பற்று கோளாவில் விநாயகர் மகா வித்தியாலய மாணவி வி.டில்ருக்சனி கல்வி சமூகத்தால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆலையடிவேம்பு கல்வி கோட்ட கோளாவில் விநாயகர் மகா வித்தியாலய மாணவியே இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பாடாசலையின் அதிபர் மு.சண்டேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற பாராட்டு விழாவானது கோளாவில் பிரதேசத்தின் பிரதான வீதியில் இருந்து ஆரம்பமானது. அங்கு மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய குழுவினரின் வரவேற்பு இசையோடு ஆரம்பமான கௌரவிப்பு நிகழ்வில் பாடசாலையின் அதிபரால் வெற்றி பெற்ற தங்கப்பதக்கம் மாணவிக்கு அணிவிக்கப்பட்டதுடன் சான்றிதழும் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து அங்கிருந்து ஆசிரியர்கள் மாணவர்கள் சகிதம் பாடசாலைக்கு அழைத்து செல்லப்பட்ட மாணவியை வீதி ஓரங்களில் காத்திருந்த மக்கள் வாழ்த்தி வரவேற்றனர். இதேநேரம் பாடாசலையின் நுழைவாயிலில் சக மாணவர்களால் மலர் தூவி வரவேற்பளித்திருந்தமை சிறப்பம்சாக அமைந்திருந்தது

வரவேற்பில் மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வில் பங்கேற்ற மாணவி ஒருவரும் பயிற்சி அளித்த ஆசிரியரும் அதிபரும் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். குறித்த மாணவி அம்மன் மகளிர் இல்லத்தில் இருந்து கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்நூறு குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம்



**(அ . அச்சுதன்)**

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி, பட்டணமும் சூழலும், மூதூர், தம்பலகாமம், கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும், பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், வீட்டுத் தோட்டம் செய்வதற்கு உதவி கோரிய ஐந்நூறு ( 500) வறிய குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்குரிய நாற்றுகளையும் விதைகளையும் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் நேற்று (10) வழங்கியது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் இந்த உதவிகளை வழங்கி வைத்தார். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அலுவலர்கள், விவசாய சம்மேளன அலுவலர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த வீட்டுத் தோட்டம் செய்வதற்கான நாற்றுகளையும் விதைகளையும் வழங்குவதற்கான அனுசரணையைக் கனடாத் திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக இனங்காட்டி ஏமாற்றிய பெண் தொடர்பில் விசாரணை

**பாறுக் ஷிஹான்**

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக தன்னை இனங்காட்டி வர்த்தகர்கள் உட்பட பல தரப்பினரை ஏமாற்றி இலட்சக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்தார் எனக் கூறப்பட்டு கைது செய்யப்பட்ட பெண் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை(9) விசாரணைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்ட குறித்த சந்தேக நபரான பெண் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறு மோசடி செய்து ஏமாற்றிய இலட்சக்கணக்கான பணம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பெருந்தொகை பணத்தை சந்தேக நபருக்கு வழங்கிவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து முறைப்பாடு அளிக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

சந்தேக நபரின் ஏமாற்றி மோசடி செய்த பணத்தை எங்கு அனுப்புகின்றார் என்ன நடந்தது என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளில் கவனம் செலுத்தியுள்ளனர். இதேவேளை இது தொடர்பாக சந்திவெளி ஏறாவூர் கல்முனை உள்ளிட்ட பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதாக கல்முனை தலைமையக பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த சந்தேக நபர் மட்டக்களப்பு மாவட்டம் வேலூர் பகுதியை சேர்ந்த 29 வயதான திருமணமானவர் என்பதுடன் வங்கி கணக்கின் ஊடாக சுமார் 8 இலட்சம் என தலா ஒருவர் வீதம் அறவிட்டுள்ளதுடன் கடல் வழியாக நியுஸிலாந்து நாட்டிற்கு அனுப்புவதாக கூறியே இம்மோசடியை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் எமது செய்தியாளர் பாறுக் ஷிஹானிடம் தெரிவித்துள்ளனர். மேலும் கைதான சந்தேக நபரை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம். எல் றபீக் தலைமையில் மேலதிக பொலிஸ் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## பைனா ஸ்டார் அணி சம்பியன்



**(றியாஸ் இஸ்மாயில்)**

அட்டாளைச்சேனை பைனா விளையாட்டு கழகத்தின் பைனா பிரிமியர் லீக் – 2022 (**Faina Primier League -FPL - 2022** ) கிரிக்கெட் சுற்றுத்தொடர் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (09) நடைபெற்றது. இச் சுற்றுத்தொடரில் 04 அணிகள் பங்கேற்கின்றன.இறுதிப் போட்டியில் பைனா ஸ்டார்ஸ் அணி நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்து நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர் 56 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பைனா வோறியஸ் அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடி 52 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதனால் பைனா ஸ்டார்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்று 15 ஆயிரம் பணப்பரிசுடன் வெற்றி கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டனர். இரண்டாமிட அணிக்கு 10 ரூபா பணப்பரிசுடன் கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டது.

இச் சுற்றுத்தொடரின் தொடர் சிறபக் ஆட்டநாயகன் விருது ஐ.ஹரீஸ், இறுதிப்போட்டியின் சிறப்பு ஆட்டக்காரர் விருதை வை.பாயிஸ், சிறந்த பந்துவீச்சாளர் விருதை ஜே.நுஸ்ரி பெற்றுக்கொண்டனர்.

கழகத்தின் தலைவர் கேப்டன் ஏ.சீ.எம்.றசாத் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இறுதி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதிபஸ்மா டைல்ஸ் சென்றர் நிறுவனத்தின் உரிமையாளர் மௌலவி எம்.ஐ.இஸ்ரத், கழகத்தின் முன்னாள் தலைவர் ஏ.கே.அஜ்வத் எனப் பலரும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் தின நிகழ்ச்சி





**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலகப் பகுதியின் முன்பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் தின நிகழ்வு அல் பதாஹ் மகாவித்தியாலயத்தில் நேற்று(10) இடம் பெற்றது. முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இதன் போது இடம் பெற்றதுடன்,பாலர் பாடசாலை ஆசிரிய சங்கத்தினால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. இதில் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன், சொலிடாற்றிக் லைக் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் அப்பாஸ் ஹிதாயத்துள்ளா, அல் பதாஹ் வித்தியாலய அதிபர் எம்.பீ.எம்.சமீம், ஆரம்ப முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.மசாகினா, கிழக்கு மாகாண பாலர் பாடசாலை ஆசிரியர் சங்க தலைவர் ஏ.நிரோசா, இணைப்பாளர் எம்.ஐ.சாசியா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உயர்தர மாணவர்க்கான செயன்முறை முகாம்

**(காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமையும் நாளை மறுநாள் வியாழக்கிழமையும் அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் முகாமிற்கு 2022 கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு



**Bio System Technology Engineering technology** ஆகிய பாடநெறிகளை தொடரும் உயர்தர மாணவர்களுக்கான செயன்முறை முகாம் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. கல்முனை கல்வி மாவட்டத்தில் உள்ள கல்முனை, சம்மாந்துறை, தோற்றும் அனைத்து மாணவர்களும் காலை 8 மணிக்கு தயாராக வருமாறு சம்மாந்துறை வலய விஞ்ஞான பாட இணைப்பாளர் ரி.எல்.றயிஸ்டீன் அறிவித்துள்ளார். கிழக்கு மாகாண கல்வி திணைக்கள தொழில்நுட்ப பாட உதவி கல்வி பணிப்பாளர் ஈஸா.ஸஹீட் வளவாளராக கலந்து கொள்வார்.

## மட்டு.நகர் ரோட்டரிக் கழகத்தின் புதிய தலைவராக வைத்திய கலாநிதி ஸ்ரீநாத் தெரிவு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு நகர் ரோட்டரிக் கழகத்தின் 2022 / 2023 ஆண்டுக்கான சேவை பணியேற்பு விழாவும் புதிய தலைவருக்கான பதவி ஏற்கும் நிகழ்வும் ரோட்டரிக் கழகத்தின் தலைவர் வைத்தியர் இ.ஸ்ரீநாத் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. மட்டக்களப்பு நகர் ரோட்டரிக் கழகத்தின் உறுப்பினர்களினால் அதிதிகள் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் ரோட்டரிக் கழகத்தின் புதிய அங்கத்தவர்கள் அறிமுக நிகழ்வுகளும் ரோட்டரிக் கழகத்தின் அங்கத்தவர்களை கௌரவித்து நினைவு சின்னம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

தொடர்ந்து ரோட்டரிக் கழகத்தின் 2022 /2023 ஆண்டுக்கான புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றதுடன் புதிய தலைவராக வைத்தியர் இ.ஸ்ரீநாத் தெரிவு செய்யப்பட்டார். நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிடிஜி . பி.டி.ஆர்.ராஜன் கலந்துகொண்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனை. மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர ஆணையாளர் என்.மதிவண்ணன், ரோட்டரிக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள், பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு நகர் ரோட்டரிக் கழகத்தின் 2022 / 2023 ஆண்டுக்கான சேவை பணியேற்பு விழாவில் மட்டக்களப்பு ஏறாவூர் சவுக்கடி சிவபுரம் சிவசக்தி வாசகசாலைக்கு புத்தகங்களும், கித்துள் ஸ்ரீ கிருஸ்ணா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் , வந்தாறுமூலை பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவையுடையவருக்கான சக்கர நாற்காலியும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டதுடன், உயர்தரத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டில் தேசிய ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக உள நல தினத்தினை முன்னிட்டு “சகவாழ்வும் சௌஜன்யமும்” வீதி நாடகம்





**நூருல் /ஹுதா உமர்**

சர்வதேச உலக உள நல தினத்தை முன்னிட்டு “அனைவரினது உள நலம் மற்றும் நல்வாழ்வை உலக அளவில் முதன்மைப்படுத்துவோம்” என்ற தொனிப்பொருளில் பாதிக்கப்பட பெண்களுக்கான அமைப்பின் ஒருங்கினைப்பாளர் எஸ்.டீ. நஜீமியாவின் ஏற்பாட்டில் இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் ஒருங்கிணைப்பில் உலக உள நல தினத்தினை முன்னிட்டு “இனங்களுக்கிடையில் சக வாழ்கை கட்டியெழுப்புவோம்”' எனும் கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம் திங்கட்கிழமை (2022.10.10) பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் ஏ. இக்ராம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளான திட்ட இணைப்பாளர் நடராஜா சுமதி, உதவித் திட்ட இணைப்பாளர் செல்பவதி கங்கேஷ்வரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு வீதி நாடகத்தினை கண்டு மகிழ்ந்தனர். இலங்கையில் வாழும் மக்களின் உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்கு இனங்களுக்கிடையிலான சகவாழ்வும் ஒற்றுமையும் அவசியமாகும். அண்மைக்காலமாக இலங்கை சமூகத்தில் வேரூன்றியுள்ள இன அடிப்படையிலான சிந்தனையை இல்லாமல் செய்து மக்கள் மத்தியில் இன சௌஜன்யத்தை கட்டியெழுப்புவதே இவ் வீதி நாடகம் மக்களுக்கு சொல்லும் செய்தியாக அமைந்திருந்தது.

# கல்முனையில் ஆயுள்வேத இலவச மருத்துவ முகாம்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சுதேசவைத்தியஇராஜாங்கஅமைச்சின் அனுசரணையில், முதியோர் தினத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆயுர்வேதப் பிரிவின் ஏற்பாட்டில், கல்முனைக்குடி சுஹறா வித்தியாலயத்தில் இலவச வைத்திய முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது. வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இவ்வைத்திய முகாமில், கல்முனைக்குடியில் உள்ள முதியோர் சங்க உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ. எல்.எம்.ரிபாஸ் மற்றும் கல்முனை பிரதேச செயலாளர் ஐ.லியாக்கத் அலி, கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி ஏ.சீ.எம்.மாஹிர், பிரதிப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ. வாஜித், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் மது சூதினன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முதியோர் சங்கத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திடீர் சுகயீனம் காரணமாக மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா கல்விப் வலயத்திற்குட்பட்ட கொட்டகலை பிரதேசத்திலுள்ள தோட்டப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களில் 11 மாணவர்கள் இன்று (11) திடீர் சுகயீனமுற்ற நிலையில் சிகிச்சைக்காக கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பாடசாலை மாணவர்கள் காய்ச்சல் ,வாந்திபேதி மற்றும் சளி அறிகுறிகள் தோன்றியதன் காரணமாக 5 மாணவர்கள் மற்றும் 6 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி கே. சுதர்சன் தெரிவித்தார். இந்த மாணவர்கள் தற்போது வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும், இது தொடர்பில் சுகாதார திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி கே.சுதர்சன் மேலும் தெரிவித்தார்.

# பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துடன் தேவைப்பாடுகள் அபிலாஷைகள் தீர்க்கப்படும்



**(ரக்ஸனா)**

இந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துக்களை உள்ளடக்கியதொரு பாதீட்டை (வரவு செலவுத் திட்டத்தை)த் தயாரித்து அதனூடாக பிரதேச மக்களின் அபிலாஷைகள், தேவைகள் தீர்க்கப்படும் என குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ. முபாறக் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றங்களில் அவ்வப் பிரதேச மக்களது திட்ட முன் மொழிவுகளை உள்வாங்கி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பயிற்சிச் செயலமர்வுகள் குச்சவெளி பிரதேச சபையில் ஞாயிறு திங்கள் (09.10) ஆகிய இரு தினங்களிலும் இடம்பெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ள நிதி, பௌதீக, மனித வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி பிரதேச மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டமாக இந்த செயலமர்வுகளை இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பு நடத்தி வருகின்றது.

யூ.எஸ். எய்ட் சர்வதேச தன்னார்வ நிறுவனத்தின் நிதி அனுசரைணயில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் மக்களையும் பிரதேச சபை நிருவாகத்தையும் இணைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பயிற்சிச் செயலமர்வில் குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் ஏ. முபாறக், உப தலைவர் ஏ.எஸ்.எம். சாஜித், செயலாளர் ஏ. மாலினி உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், வட்டாரங்களிலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சன சமூக நிலைய உறுப்பினர்கள், பெண்கள் இளைஞர்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சிச் செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதேச சபையின் தவிசாளர் முபாறக் இதுவரை காலமும் சபைக்கான வரவு செலவுத் திட்டத்தை நாங்களாகவே தயாரித்து அதனூடாக இந்த சபையின் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தோம். ஆனால், தற்போது அந்த முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. பிரதேச பொது மக்களின் கருத்துக்களை உள்வாங்கி பிரதேச மக்களின் முன்மொழிவுகளுக்கேற்ப எந்தவிதமான பாகுபாடுகளுமில்லாமல் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சகல கிரமங்களுக்கும் நகரங்களுக்கும் வழங்கப்படும் சேவைகள் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பிரதேச மக்கள் இப்பிரதேச சபையினூடாக ஒரே குடையின் கீழ் வாழ வேண்டும். அதனடிப்பயைடில் இந்த சபை எதிர்காலத்தில் அதன் நடவடிக்கைகளை பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துடன் உள்ளடக்கியதொரு பாதீட்டை (வரவு செலவுத் திட்டத்தை)த் தயாரித்து அதனூடாக பிரதேச மக்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படும். அந்த ஒழுங்கினடிப்படையில் இந்த சபை சுமுகமாகவும் சிறப்பாகவும் இயங்கும். அதற்கான முன்னோடி கருத்தரங்குகளையும் பயிற்சிகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொண்டு அகம் நிறுவனம் எமக்கு ஆலோசனைகளையும் அனுசரணையையும் வழங்கி வருகின்றது.

அதற்காக இந்த சபையின் சார்பிலும் பிரதேச மக்களின் சார்பிலும் எமது நன்றிகள்” என்றார். பயிற்சிச் செயலமர்வின் இறுதியில் மக்கள் பங்கேற்புடனான வரவு செலவுத் திட்டத்திற்காக பிரதேச மக்களால் முன்னுரிமை அடிப்படையில் தேவைகள் அடையாளம் காணப்பட்டு குச்சவெளி பிரதேச சபை நிருவாகத்தினரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன். சற்சிவானந்தம் அதன் திட்ட உத்தியோகத்தர் வேலாயுதம் மோகன் ஆகியோர் பயிற்சிச் செயலமர்வை நெறிப்படுத்தினர். உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட சமூக அபிவிருத்தி அலுவலர் சட்டத்தரணி அன்பழகன் குறூஸ் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.



திரு.வேலுப்பிள்ளை முரளீதரன் (ஆங்கில ஆசிரியர் திஃபுனித சூசையப்பர் கல்லூரி) அவர்கள் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக உயர் நீதிமன்ற நீதிபதி திரு.மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (படங்கள்–வ.ராஜ்குமார்)



இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன. இப்பொதிகள் தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 35 கிலோ அரிசி மற்றும் 15 கிலோ மாவு அடிப்படையில் இப்பொதிகள் வழங்கப்பட்டன.


**தலவாக்கலை பி.கேதீஸ்**

# சென்.மேரிஸ் முன்பள்ளி பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கௌரவிப்பு

**தலைமன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ**

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகின்ற சென்.மேரிஸ் முன்பள்ளி பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களான திருமதிகள் குயின்றஸ் சர்மிளா பெரேரா , சுதாகர் றொசபெல் பர்ணாந்து மற்றும் பொஸ்கோ ஹெலினா டபேரா ஆகியோரை ஆசிரியர்





தினத்தை முன்னிட்டு பெற்றோர் கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய் கிழமை (11.10.2022) புனித வெற்றிநாயகி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றபோது பிரதம அதிதியாக பேசாலை பங்கு தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவருமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து கொண்டபோது சிறுவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் நடனங்களுடன் பங்கு பற்றியோரின் ஒரு பகுதினரையும் படங்களில் காணலாம்





செல்லையா குலசேகரராஜசிங்கம் (இளமாறன்) எழுதிய நினைவழியா நாட்கள் நூல் வெளியீட்டுவிழா கடந்த சனிக்கிழமை சுவிஸ்நாட்டில் சூரிச் மாநிலத்தில் நடைபெற்றபோது முதற்பிரதியினை சமுகசெயற்பாட்டாளர் பேர்னாட் எவலின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ராஜா நித்தியானந்தனிடமிருந்து பெற்றுக்கொள்வதையும், மங்களவிளக்கேற்றல், ஏனைய அதிதிகள் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## காரைதீவு பெண்கள் பாடசாலையில் ஆசிரியர் தினம்



**( காரைதீவு சகா)**

காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்களா பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தினம் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் நேற்று கோலாகலமாக இடம்பெற்றது . பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கலந்து சிறப்பித்தார். இதன் போது மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியிலே கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கம் வென்ற மாணவர்கள் தவிசாளரினால் கௌரவிக்கப்பட்டனர். 11ஆம் வகுப்பு மாணவர்களால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதனை தொடர்ந்து தவிசாளருடைய தூரநோக்கான செயற்பாடு காரைதீவு மண்ணினுடைய கல்வி வளர்ச்சிக்காக உதவுதல் என்கின்ற தொனிப்பொருளில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கௌரவிக்கப்பட்டார். இதன் போது பாடசாலை துறை சார் அதிகாரிகள் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

## சிறுத்தை உயிரிழந்த நிலையில் மீட்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா இராகலை வனப்பகுதியில் கம்பி வலையில் சிக்கி உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலமொன்று இன்று (11) மீட்கப்பட்டதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். கால்நடைகளைப் பிடிப்பதற்காக மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி இந்த சிறுத்தை கடந்த ஒரு சில தினத்திற்கு முன்பு உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கம்பி வலையில் சிக்கிய இந்த சிறுத்தை சுமார் 7 அடி நீளமுள்ள நன்கு வளர்ந்த ஆண் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த சிறுத்தையின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல கால்நடை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களம் விசேட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாவிதன்வெளி தவிசாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளை எதிர்த்து உறுப்பினர்கள் போராட்டம்



**(சுமன்)**

நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பிரதேசசபை உறுப்பினர்கள் இன்றைய தினம் கறுப்புப் பட்டி அணிந்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். நாவிதன்வெளி பிரதேசசபையில் முன்னாள் தவிசாளர் த.கலையரசன் அவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றமையைத் தொடர்ந்து ஏற்பட்ட தவிசாளர் வெற்றிடத்திற்கு அமரதாஸ ஆனந்த அவர்கள் 2020ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சில காலங்களாக தவிசாளரின் செயற்பாடுகள் தன்னிச்சையாக இடம்பெறுவதாகவும், பிரதேசசபை உறுப்பினர்களின் முன்மொழிவுகள் நிறைவேற்றப்படாமை, மக்களுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமல் இருப்பது போன்ற பதினாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பிரதேசசபையின் உறுப்பினர்கள் இன்றைய தினம் இவ்வார்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

இன்றைய தினம் சபையின் 56வது பொதுச்சபை அமர்வு இடம்பெறுவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருந்த நிலையில் திடீரென கூட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில்சபை நடவடிக்கைகளுக்காக வருகை தந்த உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தவிசாளரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு கூட்டம் இடம்பெறாமைக்கும் சேர்த்து இன்றைய ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

மேற்படி நாவிதன்வெளி பிரதேசசபையில் 13 உறுப்பினர்கள் இருக்கின்ற நிலையில் அதில் 11 உறுப்பினர்கள் இணைந்து இன்றைய ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கலாநிதி மேரா விரிவுரையாளராக கடமையை பொறுப்பேற்றார்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரசடித்தீவுக் கிராமத்தில் பிறந்த கலாநிதி கவிஞர் த.மேகராசா கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறையின் விரிவுரையாளராக நேற்று(10) கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

உயர்தரம் வரை அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி, தமிழ் பாடத்தினை சிறப்பு கற்கையாக வெளியேறி, தமிழ்ப் பாட ஆசிரியராக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமைப் புரிந்த நிலையிலேயே, விரிவுரையாளராக நியமனம் பெற்று கடமையை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

கிழக்குப்பல்கலைக்கழகத்திலேமுதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களைப்பெற்றுக்கொண்ட இவர், கவிஞராக எல்லோராலும் அறியப்பட்டவராவார். இதுவரை ஆய்வு, ஆக்கம், தொகுப்பு, பாடத்துறை என 20க்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இலங்கை மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் இவர், பட்டிப்பளைப்பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் நீண்ட நாள் தலைவராகவும் செயற்படுவதோடு, இப்பிரதேச கலைஞர்களின் நூல்களின் நூல்களை வெளியிடுவதற்கும் துணை நின்றுள்ளார். தொடர்ந்தும் பிரதேசம்சார்ந்த ஆய்வுச்செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வகின்றமையும் எடுத்துக்காட்டத்தக்கது. குறித்த கவிஞர், எழுத்தாளர் மேலும் உயர்ந்து நிற்க பட்டிப்பளைப்பிரதேச கல்விச்சமூகமும், கலைஞர் சமூகமும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டனர்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

## ஜெனீவா, ஐ.நா. மனித உரிமைகள்பேரவையில் அவமானப்படக்கூடிய விதத்தில் இலங்கைக்குத் தோல்வி

### பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

மிகவும் அவமானத்திற்குரிய ஒரு தோல்வி இலங்கைக்குக் கிடைத் திருக்கின்றது. நாட்டிற்கு எதிராக ஜெனீவா ,ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் எங்கள் நாடு தோல்வியடைந்து விட்டது.எமக்கு ஆதரவாக இருந்த பதினொரு வாக்குகள் இப்பொழுது ஏழாகச் சரிந்திருக்கின்றன. அதேபோல் நடுநிலையாக இருந்தவர்கள் 24 ல் இருந்து 20 ஆக குறைவடைந்திருக்கின்றார்கள். இது மிகவுமே அவமானத்திற்குரிய தோல்வி என்றுதான் குறிப்பிட்டாக வேண்டும்.

ஜனாதிபதியின் விசேட உரைதொடர்பிலான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும்தெரிவித்ததாவது, எமது வெளிநாட்டு அமைச்சர் சில இஸ்லாமிய நாடுகளின் ஒன்றிய நாடுகள்(ழுஐஊ) இலங்கைக்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்று எண்ணியிருந்தார் ஆனால், எந்தவிதமானசாதகமானபதில்களும்அந்தஇஸ்லாமிய நாடுகளின் ஒன்றிய நாடுகளிடமிருந்து(ழுடஊ) எங்களுக்கு பெறப்பட்டதாகவில்லை. எங்களுக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு சீனா முயற்சித்திருக்கின்ற விடயம் எங்களுக்கு தெரிந்த விடயம், ஆனால் ,இவ்வாறான விடயங்கள் காரணமாக எங்களுக்கு எவ்விதமான நன்மையும் வரப்போவதில்லை.

நாங்கள் ஒரு விடயத்தை தெரிந்துகொள்ள வேண்டும் பொருளாதார குற்றவியல் தொடர்பான பிரச்சினை காணப்படுகின்றது. இது இந்த தீர்மானத்தின் ஒரு பகுதி அல்ல. இருந்தும், எமது நாட்டில் இருக்கின்ற அரச அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற ஒரு விடயமாகத்தான் இது காணப்படுகின்றது. ஆகவேதான் அந்த விடயம் சில பேச்சுவார்த்தை மூலம் ஒரு கட்டத்திற்கு அந்த பிரச்சனையினை நாங்கள் தவிர்த்திருக்க முடியும், ஆனால் இரண்டாவது தடவையாக வெளிநாட்டு அமைச்சர் அங்கு சென்றிருந்தார். இது முன்னர் ஒரு காலமும் இடம்பெறாத விடயமாகத்தான் காணப்படுகின்றது. இருந்தும் இலங்கைக்கு ஏற்பட்டது மிகவும் கவலைக்குரிய ஒரு தோல்வி என்றுதான் குறிப்பிடவேண்டும். இது எமது நடவடிக்கைகள் காரணமாகத்தான் நாங்கள் இப்போது தேவையில்லாத பிரச்சினைக்குள் நாங்கள் இப்போது சிக்கியிருக்கின்றோம் . புது ஒரு சட்டமூலம் கொண்டுவரப்படவிருக்கின்றது அதாவது ஆட்களை புனர்வாழ்வு அளிப்பது தொடர்பாக கொண்டுவரப்படவிருக்கின்றது அதேபோன்று பயங்கரவாத தடைச் சட்டம்(Pவுயு) , இனவாத செயற்பாடுகள் ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற செயற்பாடுகள் ஆகிய அனைத்தும் இப்போது உயர் நீதி மன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது அதன் காரணமாக இறுதியான தீர்ப்பு வரும்வரை இப்போது அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த புதிய சட்டமூலமானது அவர்கள் என்ன செய்ய விரும்புகின்றார்களோ அதனை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு விடயமாகத்தான் காணப்படுகிறது.



அது மட்டுமல்லாமல், பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்டு, ஈற்றில் அவர்கள் அதனுடைய பாரதூரதன்மைஅறிந்துசிலஅதிகாரிகள்மேற்கொண்ட பிழை காரணத்தினால்தான் இது இடம்பெற்றதாக குறிப்பிட்டு அதனை நீக்கியிருக்கின்றார்கள். சட்டமா அதிபரினுடைய கருத்து இது தொடர்பாக பெறப்படவில்லை என்கின்ற அடிப்படையிலேதான் அப்போது நீக்கப்பட்டிருக்கின்றது .இது மிக மோசமான விடயம் .

ஒரு விடயத்தை நாங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும் குறிப்பாக இந்த சட்டமூலம் முன்னாள் போராளிகள், அதேபோன்று போதைப்பொருள் பாவனையில் உள்ளவர்கள் அதேபோன்று அனைவரும் இந்த புனர்வாழ்வு அளிப்பு சட்டத்தின் முன் கொண்டுவரப்படவிருக்கின்றார்கள். இதன் காரணமாக சாதாரணமான மக்கள் கூட நீண்டகாலமாக எவ்விதமான சட்டநடவடிக்கைகளுமின்றி அவர்கள் தடுத்துவைக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படக்கூடியதாகவிருக்கும் இதன் காரணமாக அடிப்படை உரிமை மீறக்கூடிய சந்தர்ப்பங்கள் கூட எழலாம். அதுமட்டுமல்லாது அரசாங்கத்திற்கு எதிராக போராடுகின்ற மக்களை முடக்குகின்ற ஒரு நோக்கத்ததைக் கொண்டதாகத்தான் இது காணப்படுகின்றது. இந்த சட்டமூலத்தை நாங்கள் பார்க்கின்றபோது இராணுவத்தினரை ஜனாதிபதி வரவழைக்கின்ற சில அதிகாரங்கள் கூட இந்த சட்டத்தில் காணப்படுகின்றன. உறுப்புரை பிரிவு 22 குறிப்பிடுவதன்படி எதாவது தடை கொண்டுவரப்படுமாக இருந்தால் அது கூட தண்டனைக்குரிய குற்றமாக்கப்படுகின்றது.

முன்னாள் போராளிகள் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் என்ன நடந்தது என்று சொன்னால், தானாக அரச பகுதிக்குள் வந்தவர்கள், சிறு போராளிகள், சாதாரணமான மக்கள் ,அவர்கள் உண்மையிலேயே போராளிகள் அல்ல அவர்கள் ஏறத்தாழ 12,000 ம் பேர் புனர்வாழ்வு அளிப்பதற்காக கருதப்பட்டார்கள். எமது நாட்டில் காணப்பட்ட அந்த வெற்றி சந்தோஷத்தில் யாருமே அதனை சவாலுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்பட்டது. மக்கள் அவர்களுடைய உற்ற உறவினருடன் எந்தவிதமான தொடர்பினை இல்லாத நிலை காணப்படுகின்றது அந்த நேரத்திலே செயலாளராக இருந்தவர் முன்னாள் ஜனாதிபதி அவர்கள் சில தீர்மானத்தினை மேற்கொண்டிருந்தார், இதன் மூலம் அந்த மக்களை அவர் மிகவும் மோசமான முறையில் நடத்தியிருந்தார். ஆகவேதான் இந்த சட்டமூலமானது மிகவும் மோசமான புனர்வாழ்வு அளிப்பு முறையினை கொண்டுவரக்கூடியதாகவிருக்கும் ஆகவேதான் இந்த சட்டமூலம் இப்போது உயர் நீதி மன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த சட்டமூலம் காரணமாக நீங்கள் சொல்லக்கூடாது உங்களுக்கு எதிராக போராடுகின்ற அனைவரும் பிழையான முறையிலே தண்டிக்கப்படவேண்டும் என்று நீங்கள்அரசாங்கம் என்ற ரீதியில் நினைக்கக்கூடாது. யாராவது உங்களுக்கு எதிராக போராடுகின்ற போது அவர்களை பயங்கரவாதிகளாக நீங்கள் காட்ட முற்படுகின்றீர்கள். இது மோசமான விடயம் ஆகவேதான், மக்கள் போராடுவதிலிருந்து அவர்களை தவிர்ப்பதற்காக நீங்கள் எடுக்கின்ற முயற்சியாகத்தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம். இந்த சட்டமூலம் சாதாரணமான முறையிலே அவர்கள் நீதி மன்றத்திற்கு செல்லுகின்ற அவர்களுடைய உரிமை மீறப்படுகின்றமை ஏனென்றால் 2 வருடங்கள் அவர்கள் இந்த நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள் எந்தவிதமான நீதி கோருவதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்படாமல் அவ்வாறு நடக்கின்றது.ஆகவேதான் இது இறுதியில் எமது சமூகத்தில் பிளவுகளை உருவாக்குவதற்கு இது ஒரு காரணமாகக்கூட அமையலாம். ஆகவேதான் இந்த விடயம் மீண்டும் ஒரு முறை பரிசீலனைக்கு கொண்டுவரப்படவேண்டும்



**தொகுப்பு
எம்.என்.எம்.யஸீர் அறபாத்
ஓட்டமாவடி**